இப்போதுகூட தமிழ்நாடு வீட்டு வசதித் துறையின் மூலம் எல்.ஐ.ஜி-1, எல்.ஐ.ஜி-2 போன்ற மிகவும் கீழே இருப்பவர்களுக்கு வழங்கப்படுகின்ற அந்த வீடுகள், அந்த மனைகள் மட்டும் பல இடங்களில் விற்பனையாகாமல் இருக்கின்றன. அதிலே மாதத்திற்கு 200 ரூபாய், 300 ரூபாய் கட்டுகிற அளவிற்கு அவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்க...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வீடுகள் பக்கத்திலேயே கட்டிக் கொடுக்கப்படுமா? அதை மட்டும் கேளுங்கள்.

திரு. கே. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, அந்த வாய்ப்பை அவர்கள் விரும்பினால், அங்கே பாதிக்கப்பட்டிருக்கின்ற அவர்கள் விரும்பினால் மாதம் 200, 300 ரூபாய் கட்டுகிற அளவிற்கு மனைகளைக் கொடுப்பதற்கு ஏதாவது வாய்ப்பு இருக்குமா என்று தங்கள் மூலம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடம் மருத்துவமனைக்காக ஒதுக்கப்பட்டது என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதுமட்டுமல்லாமல் அவர்கள் கூலித் தொழில் செய்கிறார்கள் என்று நீங்களே கூறிவிட்டீர்கள். எங்கேபோய் வேலை பார்த்துக்கொண்டு, தங்களுடைய பிழைப்பை நடத்துவார்கள் என்பது உங்களுடைய கருத்து. அந்தக் கருத்தை எடுத்துக்கொண்டால்கூட, அவர்களுக்கு மாற்று இடம் எங்கே கிடைக்கிறதோ, அங்கே அவர்கள் கூலித் தொழிலைச் செய்து அவர்களுடைய வேலையைச் சிறப்பாக கவனித்துக் கொள்வார்கள். எனவே அவர்களுக்கு மாற்று இடம் கொடுப்பதற்காக, தமிழக அரசு, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனையின்பேரில் நடவடிக்கை எடுக்கப்படும்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஈ) 209 டி.எம்.சி. தண்ணீர் அளித்துவிட்டதாக கர்நாடக முதல்வர், கடிதம் எழுதியதாக வந்த செய்தி—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன் அவர்கள், காவிரி நீர் தொடர்பாக எழுப்பிய கேள்விக்கு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் தருவார்கள்.

2002 மே 8]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், இன்றைய செய்தித்தாளில், மாண்புமிகு கர்நாடக முதல்வர் அவர்கள், தமிழகத்திற்குத் தரவேண்டிய காவிரி நீரின் அளவைக் காட்டிலும், 209 டி.எம்.சி. நீர் தந்துவிட்டோம் என்றும், அதைப்பற்றி தமிழக அரசுக்கு கடிதம் மூலமாகத் தெரிவித்து இருக்கின்றோம் என்றும் செய்தி வந்திருப்பது குறித்து விவரங்களைக் கேட்டார்கள். நானும் அந்தச் செய்தித்தாளினுடைய செய்தியைப் பார்த்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போலவும், செய்தித்தாளில் வந்த அடிப்படையிலும், நம்முடைய பொதுப் பணித் துறைக்கோ, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கோ எந்தவிதமான கடிதமும் இதுவரை வரவில்லை என்பதையும் தெரிவித்துக்கொண்டு, அவர்கள் ஒரு வருடத்திற்கு 205 டி.எம்.சி. நீர் தரவேண்டும். அதாவது. ஜூன் 1 ஆம் தேதியிலிருந்து, மே 31 ஆம் தேதி வரையில், 205 டி.எம்.சி. நீரை அவர்கள் தரவேண்டும். அந்த 205 டி.எம்.சி. நீரைம், நம்முடைய மேட்டூர் அணைக்கு entry point-ல் அவர்கள் தரவேண்டும் என்பதுதான், காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு இருக்கிறது. 1-6-2001 முதல், 8-5-2002 வரை மேட்டூரில் கிடைத்திருக்க வேண்டிய நீரின் அளவு, 203.55 டி.எம்.சி. ஆகும். அதாவது, ஜூனிலிருந்து இன்று வரை, அவர்கள் தந்திருக்க வேண்டிய நீரின் அளவு 203.55 டி.எம்.சி. ஆகும். ஆனால் நமக்குக் கிடைத்திருப்பதோ 160.84 டி.எம்.சி. நீர் மட்டுமே. ஆக 42.71 டி.எம்.சி. நீர் குறைவாகத்தான் வந்திருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 100 முதல் 108 வரையிலான ஒன்பது